திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நீங்கள் என்னை விரிவாகப் பேச விடுவதில்லை. 15 நிமிடமாவது பேச விட்டால் நிறைய சொல்லுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சிறிய விஷயம். இன்றைய நிலைமையை முதலிலே சொல்லி விடுகிறேன். இந்த விவாதம் முடிந்து நமது முதலமைச்சருடைய ஆட்சி மன்றச் செயலாளருடைய பதிலுரை முடிந்து அதற்கு பிறகு 9 சட்ட முன் வடிவுகள் 1.30-க்குள் முடிய வேண்டும். 4 மணிக்கு மீண்டும் சட்ட மன்றம் இருக்கிறது. முன் வரிசையில் இருக்கிற அத்தனை பேரும் பேச வேண்டும். அதற்கப்புறம் எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. இரவு 9 மணி ஆனாலும் 10 மணி யானாலும் நடத்திக் கொண்டே இருக்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அடுத்து மண்டல் கமிஷன், ஊரிலே எங்கே போனாலும் மண்டல் கமிஷன், மண்டல் கமிஷன் என்று பேசுகிறார்கள். 47 கோடி பேருக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலையிலே நீங்கள் பேச வேண்டும். அதை நினைவூட்டுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : 47 கோடி பேருக்கு சலுகை கொடுத்தது எங்கள் சர்க்கார், வி.பி. சிங் அவர்கள் கொண்டு வந்தார்கள். அவர் பதவி இழந்த காரணமே அது தான். இவ்வளவு சலுகை கொடுத்தார்களே, அது எதற்காக கொடுத்தார்கள், யாருக்காக கொடுத்தார்கள்' எதற்காக பதவி இழந்தார்கள் என்று யாருக்காவது தெரியுமா ? இன்னும் சட்டமன்றத்திலே கூட சரியாக நாம் அதைப் பற்றி விரிவாகப் பேசவில்லை. ஆதரவு கொடுத்தார்கள், சலுகை கொடுத்தார்கள் என்றால், யார் வி.பி. சிங் என்று கேட்கிறார்கள். அந்த நிலைமை இந்த நாட்டிலே உருவாகியிருக்கிறது. மண்டல் கமிஷனிலே என்ன சொன்னான் ? கவர்னர் அறிக்கையைப் பார்த்தேன் நான். 1890 ஆம் வருஷத்திலே 16 வகையான பேக்வேர்டு கிளாசுகள் தான் இருந்தன. 1903 லே 63 தான் பேக்வேர்டு கிளாசுகள். இன்றைக்கு 213 பேக்வேர்டு கிளாசுகள் இருக்கின்றன என்றால் எங்கேயிருந்து முளைத்தன அவை ? எப்படி என்று தெரியவில்லை. வெள்ளைக்காரன் காலத்திலே 16 ஆக இருந்து, பிறகு 63 ஆகி, இன்றைக்கு இருநூற்று சொச்சம் பேக்வேர்டு கிளாசுகளாக இருந்தால் இன்னும் எத்தனை இருக்கிறதோ, அத்தனைக்கும் எப்படி தருவது ? மண்டல் கமிஷன் அறிக்கை பொதுவில் சரி, அப்படி எல்லோருக்கும் வர வேண்டியது தான். நாங்களே வாழ வேண்டும் என்று சொல்ல வில்லை. இனிமேல் யாராவது வாழட்டும். ஆனால் அதற்கும் வழி வகை விட மாட்டேன் என்கிறார்களே, இப்போது பாருங்கள் வடக்கே குத்திக் கொண்டு சாகிறார்கள். நிஜமாக சாகிறார்களோ அல்லது சீமெண்ணெய் ஊற்றி சாகடிக்கிறார்களோ

தெரியவில்லை : பேக்வேர்டு கிளாஸ் என்பது யார் ? அந்தக் காலத்திலே நாடார்கள் இருந்தார்கள், அதற்கப்புறம் தேவர்கள் இருந்தார்கள், அப்புறம் கள்ளர்கள், எங்கள் ஊரிலே அம்பலக்காரர்கள் இருந்தார்கள், இங்கே வந்தால் படையாச்சி என்று இருக்கிறார்கள். ஆப்புறம் கூலி வேலை செய்கிறவர்கள் வண்ணார் இவர்கள் எல்லாம் பேக்வேர்ட்டு கிளாஸ் என்கிறார்கள். இப்போது எல்லாரமே பேக்வேர்டு கிளாஸ், எதிலும் பேக்வேர்டு கிளாஸ்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா என்னைப் பார்த்துப் பேசுங்கள் ஐயா (சிரிப்பு), போகிற போக்கைப் பார்த்தால் அங்கேயே இசைவு கேட்டு பேசுவீர்கள் போல் இருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : எதற்காக சொல்லுகிறேன் என்றால், தானும் கெட்டு சந்திர புஷ்கரணியையும் சேர்த்து கெடுப்பது போல் ஆகிவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே முன்னாலே இருந்து யாராவது தூண்டி விடுகிறார்களா ஐயா ? (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இல்லை அப்படி ஒன்றும் கிடையாது. அதற்கப்புறம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னுமா அப்புறம். மாலையிலே வேறு இருக்கிறது. இது துணை நிதி நிலை அறிக்கை ஐயா. இதை முடித்து விட்டு மாலையிலே ஆளுநர் உரையிலே பேசும்போது வேண்டுமானால் அத்தனையும் பேசலாம். இவ்வளவு தூரம் சொல்லியும் விளங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறீர்களே.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : எங்களுக்கெல்லாம் கலக்குகிறது சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்களுக்கெல்லாம் நெஞ்சே கலங்குகிறது ஐயா.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : உங்களுக்கெல்லாம் கலக்காது. சபாநாயகருக்கு எதிராக ஒன்றும் இருக்கப்படாது என்று இருக்கிறது..... (சிரிப்பு).

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நிதி நிலை அறிக்கை விவாதத்தைப் பொதுவான விவாதம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. கேட்கப்பட்டிருக்கிற நிதி கொடுக்கப்படுவதைப் பற்றிய கருத்துக்களைப் பேசினால்தான் பொருத்தமாக இருக்கும். மாலையில் ஆளுநர் உரையில் தாங்களே உரையாற்றுகிறபோது தங்களுடைய இத்தகைய எண்ணங்களை வெளியிடலாம்.